# தமிழ்க்குழைந்தைகளுக்கு கணினிவழி தமிழ்க்கல்வி

ஆர்.பக்கிரிசாமி.
ஓய்வு பெற்ற மின்சார பொறியாளர் , சென்னை-600040

---

மொழி இனத்தை அடையாளம் காட்டும். தமிழ்மொழி பேசுபவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை அறியாமலே !!அம்மா !! என சொல்லி தாம் யார் என அடையாளம் காட்டுவார்கள். இது உண்மையா? இல்லையா? வெளிநாட்டில் ஒருவ்ரை பார்த்து ஓர் அதிர்ச்சி தாருங்கள் அவர்கள் அறியாமலே அவர் தாய்மொழியில் நிச்சயம் கத்துவார! அதனைக்கொண்டு அவர் எந்த இனத்தை சேர்ந்தவர் என கண்டுபிடித்து விடலாம். இதுதான் இயற்கை.இப்போது அதுகூட மாறிவருகிறது. பலப்பல ஆண்டுகள் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் நம் தாய் மொழியை மறந்து வருகிறார்கள்.

150, 200 ஆண்டுதளுக்கு முன்பு வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் தமிழை முழுமையாக மறந்து விட்டார்கள் என சொல்ல இயலாது. தமிழின் ஒலி தெரியும். தமிழ் எழுத படிக்க தெரியாது. அவர்களுடைய பிள்ளைகளின் நிலை என்ன என்று பார்த்தால் தமிழ் என்றால் என்னவென்று கேட்கும் நிலையில் உள்ளார்கள். இப்போது அவர்களிடையே ஓர் ஆர்வம் தோன்றி உள்ளது. தமிழை ஓர் அளவாவது கற்றகொள்ள வேண்டும் என்னும் ஆசை அவர்களிடையே தோன்றியுள்ளது. அதற்கு நாம் என்ன செய்தோம் ?

60, 100 ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடு சென்றவர்கள் இன்னும் தமிழை மறக்கவில்லை பேசுகிறார்கள். எழுத முடியவில்லை அவர்களும் தம் மொழியை கற்று கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் என்ன செய்தோம் ?

100 ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடு சென்றவர்கள் நிலை? பேசத்தெரியும்.தட்டு தடுமாறி எழுதவும் தெரியும் இவர்களும் தம் மொழியை நன்றாக எழுதவும். டிக்கவும் கற்று கொள்ள ஆர்வமாக உள்ளார்கள். இவர்களுக்கு நாம் என்ன செய்யவேண்டும ?

மேற்சொன்ன தமிழர்கள் தென் ஆப்ரிகா, பீசீ தீவு, பிரஞ்சு நாடு. போன்ற நாடுகள்க்கு வேலை தேடி சென்றவர்கள் பரம்பரை பரம்பரை யாகவே அங்கேயே தங்கிவிட்டார்கள். இவர்களுக்கு நாம் கண்டிப்பாய் தமிழ் கற்று கொள்ள ஓர் நிரந்தர வழி செய்தாக வேண்டும்.. அது நமது கடமையும் கூட.!

மலேசியா,சிங்கப்பூர்,சிலோன் நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலையே வேறு.. தமிழ் நாட்டுடன் தொடர்ந்து தொடர்பு வைத்து கொண்டிருப்பதால் தமிழை மறக்க வில்லை. அவர்கள் கூட தமிழ்நாட்டில் அவ்வப்போது வெளியாகும் இலக்கியங்களை படிக்க ஆர்வமுள்ளவர்களாக உள்ளார்கள்.

தமிழ்நாட்டில் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ் இணைய பல்கலைக்கழகம் தொடங்கி வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு நம் மொழியினை கற்று தருகிறார்கள். இது வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். நம்முடைய கடமையும் ஒன்று உள்ளது. தனிமரம் தோப்பாகாது. நாமும் வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு (கணினி வழி ) தமிழ் நூல்கள் சிடியில் பதியவைத்து வெளியிடவேண்டும் ஆங்கிலத்தில் இ-புக் என்று சொல்வதைப்போல. சிடி யில் தமிழ்நூல்களை பதியவைத்து வெளியிட வேண்டும்

எம் கடைமையாக பெரியவர்களுக்கென
1. சிலப்பதிகாரம்
2. பாரதியார் கவிதைகள்
3. பாரதிதாசன் கவிதைகள்

4.  திருமந்திரம் முதலிய நூல்களை சி-டியில் பதியவைத்து வெளியிட்டுள்ளோம்.
மேலும் நாலடியார் போன்ற இலக்கியங்களையும் வெளியிட உள்ளோம்

பிள்ளைகளுக்கென
1. பேசும் ஆத்திச்சூடி
2. பேசும் தெனாலிராமன் கதைகள்
3. பேசும் பஞ்சதந்திர கதைகள்
4. பேசும் விக்கிரமாதித்தன் கதைகள்.

முதலிய நூல்களை சிடி யில் பதிய வைத்து வைளியிட்டுள்ளோம்

காலம் மாறிவிட்டது.கணினி காலம் மலரந்துவிட்டது.இத்தகைய மாறுதலை பயன்படுத்தி கொண்டு நம் மொழியை உலகெலாம் பரவும் வகைசெய்திடலாம்.தமிழர்கள் உலகில் எந்த மூலையில் இருத்தாலும் தமிழை மறக்க கூடாது,மறக்கவும் முடியாது அத்தகைய நிலையை நாம் செய்தாகவேண்டும்.இந்த குறிக்கோளுடன் ஒவ்வொரு குறிக்கோளுடன் ஒவ்வொரு தமிழனும் பாடுபட வேண்டும்.

இன்னும் ஒருபடி மேலாக பழந்தமிழ் இலக்கியங்களை - சிடி-யில் பதியவைத்து பாதுகாக்கவேண்டும்.அரசு இந்த செயலை செய்வார்கள் என காத்திருக்க கூடாது.உலத்தில் உள்ள ஒவ்வொர் தமிழனின் கடமையென எண்ணி இந்த பணியை செய்தாக வேண்டும.

எமக்கு பலநாடுகளிலிருந்து இ-மெயில் வந்தன. அதில் அவர்கள் தமிழ் எழுத்தை பார்க்க முடிகிறது, ஆனால் ஒலியினைகேட்க இயலவில்லை, என்ற ஆதங்கம் அவர்களுக்கு உள்ளது. ஆக நம்முடைய கடமை பலப்பல தமிழ நூல்களை ஒலியுடன் பதியவைக்க வேண்டும் வெளி நாடுகளில் நூல்நிலையங்களுக்கு இப்படிப்பட்ட நூல்களை அனுப்பி வைக்கவேண்டும்

அமெரிக்க திரு நாட்டில் நடைபெறும் இத்தமிழ் இணைய மாநாடு இதற்கு ஒரு வழி கண்டு விடும் என நம்பிக்கை எமக்கு உள்ளது. அதற்கு நாமெல்லாம் கூடி ஒரு நிரந்தர வழி காணுவோம்.

வாழ்க தமிழ்! வளர்க நம் தமிழ் இனம்!